Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 50/2012

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : பாண்டியம்மாள் | Father/Husband Name | : கருப்பையா |
| Age | : | Calling | : |
| Date | : 09.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09 day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**2 முதல் 4 எதிரிகள் ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி 31.12.2012ம் தேதி பணி ஒய்வு பெற்று தற்போது மதுரை பெத்தானியபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது 09.02.2012ம் தேதி 14.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது மாண்புமிகு மேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட தபாலில் இருந்த புகாரின்தன்மைகேற்ப மேலூா் அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண் 3/12 பிரிவு 498(A), 406, 506(1),497, இதச மற்றும் பெண்கள் துண்புறுத்தலை தடுக்கும் சட்டப்பிரிவு 4ன்கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2ஆக குறியீடு செய்யப்படுகிறது ).

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், ஒரு நகலை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டும், அன்றைய தினம் சம்பவ இடம்

சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அம்பிகா, முனியம்மாள், பெரியசாமி, முத்தையா, கருப்பி, பழனியான்டி ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் 2ம் எதிரியான பந்தாயி என்பவரை 29.02.2012ம் தேதி 15.50 மணிக்கு வண்ணாம்பாறைப்பட்டி வீட்டின் முன்பாக வைத்து காரணம் கூறி கைது செய்து 16.10 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைத்து, அதன்பின்னர் தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கின் மற்ற எதிரிகளான 3 மற்றும் 4ம் எதிரிகள் முன் ஜாமீன் பெற்றதனால் கைது செய்யவில்லை. 1ம் எதிரி தலைமறைவாக இருந்ததனால் கைது செய்யவில்லை. எனது விசாரணை அடிப்படையிலும், சாட்சிகள் வாக்குமூலத்தின் அடிப்படையில் மாண்புமிகு உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும் இவ்வழக்கின்5ம் எதிரியான சந்திர என்பவர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று அவரை வழக்கிலுருந்து நீக்கம் செய்து எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்தேன். **(அந்த எதிரி நீக்கல் அறிக்கை அசாஆ 3ஆக குறியிடு செய்யப்படுகிறது ).** இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து 1 ம் எதிரி மீது பிரிவு 498(A), 406, 506(1), 497 இதச மற்றும் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டப்பிரிவு 4ன்கீழும், 2 முதல் 4 எதிரிகள் மீது பிரிவு 498(A), 406, 506(1) இதச வின் கீழும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். குற்ற இறுதி அறிக்கையுடன் 1ம் எதிரிக்கும் புகார்தாரர் அம்பிகாவிற்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழை அம்பிகாவிடமிருந்து பெற்று தாக்கல் செய்துள்ளேன். **(அந்த திருமண அழைப்பிதழ் அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

**2 முதல் 4 எதிரிகள் ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை, மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாணை**

புகார்தாரர் எனது காவல் நிலையத்தில் நேரடியாக புகார் கொடுத்தாரா என்றால் இல்லை நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட தபால் மூலம் வழக்க பதிவு செய்தேன். அந்த தபாலில் சம்பவம் நடந்த தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இதுசம்மந்தமாக புகார்தாரர் இதற்கு முன்னரே எங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகார் பொய் என்பதால்தான் நான் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் இல்லை. எனது விசாரணையில் புகார்தாரரும், பெருமாளும் திருப்புரில்தான் குடியிருந்தார்கள் என்ற விவரம் தெரிந்துகொண்டேனா என்றால் திருமணத்திற்கு பின்னர் சிறிது காலம் திருப்பூரில் இருந்ததாக தெரிந்துகொண்டேன், அதன்பின்னர் 1ம் எதிரி பெருமாள் தலைமறைவாகிவிட்டதனால் புகார்தாரர் அவரது மாமியார் வீட்டில் குடியிருந்து வந்தார். இருவரும் திருப்பூரில்தான் இருந்தார்கள் அங்குதான் குழந்தை பிறந்த விவரத்தை தெரிந்துகொண்டேன், ஆனால் இல்லை என்று தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் திருப்பூரில் பிரச்சனை ஏற்பட்டு புகார்தாரர் அவரது சொந்த ஊருக்கு வந்து பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது 1ம் எதிரி திருப்பூரில்தான் வேலை செய்து வந்தார் என்றால் நான் விசாரணை செய்தபோது புகார்தாரர் 1ம் எதிரி வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வருவதாக சொன்னார், விசாரணையின்போது 1ம் எதிரி ஒத்தழைக்காததால் எனக்கு அதுபற்றி தெரியாது.

2) நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபோது யார், யாரை விசாரணை செய்தேன் என்றால் அம்பிகா, அவரது தாயார் முனியம்மாள், மச்சான் பெரியசாமி, ஆகியோர்களை விசாரித்தேன். மேற்கூறிய சாட்சிகள்

யாரும் 1ம் எதிரியின் வீட்டின் அருகே இல்லை என்றால் சரியல்ல, மேலூர் வட்டத்தில்தான் குடியிருந்து வருகிறார்கள். எதிரியின் வீட்டருகே விசாரணை செய்யாததால்தான் அவர்களை நான் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் இவ்வழக்கின் சாட்சியாக சேர்த்துள்ளவர்கள் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான். 3ம் எதிரி கருப்பாயூரனியிலும், 4ம் எதிரி பூஞ்சுத்தியில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான், ஆனால் அவர்கள் வாதியின் வீட்டிற்கு வந்து செல்வது வழக்கம். நான் எதிரியின் வீட்டிற்கு சென்றபோது அவர்கள் அங்கு இல்லை என்றால் சரியல்ல, 2ம் எதிரி அங்குதான் இருந்தார். மற்ற எதிரிகளான 3 மற்றும் 4ம் எதிரிகள் அங்கு இல்லை என்றால் சரிதான். 2ம் எதிரியையும் வழக்கு விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைத்து கைது செய்தேன் என்றால் சரியல்ல.

3) நான் சாட்சிகளை விசாரணை செய்ய எந்த தேதியில், எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 14 வருடத்திற்கு முன்னர் நடந்ததனால் ஞாபகம் இல்லை. புகாரில் சொல்லப்பட்ட திருமணம் ஆன விவரத்தை குறித்து நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள 2ம் திருமணம் குறித்தும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி 2ம் திருமணம் செய்யவில்லை என்றால் திருமணம் செய்யவில்லை, திருமணம் தான்டிய உறவு வைத்திருந்ததாக புகார். புகாரில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, அதனால்தான் நான் புகார் கொடுத்த போது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, தற்போது நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட உத்தரவின் அடிப்படையில்தான் நான் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை விசாரிக்காமல் புகார்தாரரிடமிருந்து சாட்சி பட்டியலை பெற்று, காவல் நிலையத்தில்வைத்து வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பதிவு செய்தபோது 1ம் எதிரி உடல் நிலை சரியில்லாமல் இருந்த விவரத்தை தான் விசாரணை செய்திருந்தால் தெரிய வந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய்யாக எந்த ஒரு முகாந்திரமும் இல்லாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.